සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
**MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE**

මගේ අංකය
எனது இல SDD/HO/09/CBO/சுற்றறிக்கை/01
My No

ඔබේ අංකය
உமது இல ..............................................
Your No

දිනය
திகதி 2017.03.24
Date

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிதேச செயலாளர்கள்,
சகல ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்கள்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

சமுர்த்தி சுற்றறிக்கை :- சமுதாய அடிப்படை 01/2017/01

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் பிரதேச அமைப்புக்களை அமைத்தல்

## 01. அறிமுகம்

2017ம் ஆண்டின் 02ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் திருத்திய (இதன் பின்னர் சமுர்த்தி சட்டம் என அழைக்கப்படுகின்ற) 2013 ம் ஆண்டின் 1ம் இலக்க சமுர்த்தி சட்டத்திற்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு, பிரதேச அமைப்பு, மற்றும் மாவட்ட குழுவினை ஆரம்பிப்பதற்குத் தேவையான கட்டளைகள், மற்றும் அமைப்பு விதிகள் (சமுர்த்தி சட்டத்தின் 42 வது பிரிவு) உள்ளடங்கிய 2017 மார்ச் 07ம் திகதியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2009/08ம் இலக்கத்தினையுடைய அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சமுர்த்தி சட்டத்தின் அடிப்படை குறிக்கோளான வறுமையினை ஒழித்தல், மற்றும் சமூக சமத்துவத்தினை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் உள்ளடக்கப்படுகின்ற பிரகாரம் தன்னார்வத்துடன் கூடுகின்ற சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை ஆரம்பிப்பதும், (சமுர்த்தி சட்டத்தின் 09 வது பிரிவு) பிரதேச அமைப்புக்களை உருவாக்குவதும் (சமுர்த்தி சட்டத்தின் 15 வது பிரிவு) சமுர்த்தி மாவட்டக் குழுக்களை உருவாக்குவதும் (சமுர்த்தி சட்டத்தின் 19 வது பிரிவு) மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களை உருவாக்கும் பொருட்டு முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் இச்சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்படும்.

### குறிப்பு 01 :-

2013ம் ஆண்டின் 01 ம் இலக்க சமுர்த்தி சட்டம் 2013 மார்ச் 07ம் திகதியிடப்பட்ட 2009/08 என்ற இலக்கத்தினையுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடங்கியுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் தலைமையதிபதி
Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail- dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්)
பணிப்பாளர் ( மனிதவளம்)
Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී
பிரதான கணக்காளர்
Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)
பணிப்பாளர் (குறு நிதி)
Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය
அலுவலகம்
Office
011-2887280
Hot Line: 011- 2887722

02. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினை ஆரம்பிப்பதற்கான முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துதல்.

I. முதலாவது பொதுச் சபைக் கூட்ட திகதியை தீர்மானித்தல்

2017 ம் ஆண்டின் மார்ச் 15ம் திகதியின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் நாட்டின் சகல சமுர்த்தி வலயப் பொறுப்பு (சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சொந்தமான அதிகார பிரதேசம்) சமுர்த்தி முகாமையாளர்களால் வலய உதவியாளர்களாக கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி உத்தியோகத்தர்களை முடியுமானளவு விரைவாக வரவழைத்து குறித்த சமுர்த்தி வலயத்தின் சமுதாய அடிப்படை அமைப்பினை ஆரம்பிக்கும் பொருட்டு முதலாவது பொதுச் சபைக் கூட்ட நாட்களை (2017 மார்ச் 31ம் ம் திகதிக்கு முன்னர் என்ற வகையில்) தீர்மானிக்க வேண்டியதுடன் ஒவ்வொரு சமுதாய அடிப்படை அமைப்பிற்கும் சொந்தமான அந்த நாட்களை வலயமட்ட அறிக்கையில் சரியாகக் குறிப்பிட வேண்டும்.

II. முதலாவது பொதுச் சபைக் கூட்ட அழைப்பு

கிராம உத்தியோகத்தர் பிரிவுப் பொறுப்பு சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேலே 02.1 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட முதலாவது மகா சபைக் கூட்ட திகதிக்கு 03 நாட்களுக்குக் குறையாத நாள் ஒன்றில் பிரசித்த இடங்களில் அறிவித்தல்களை காட்சிப்படுத்துவது மற்றும் தற்போது செயற்படும் சமுர்த்தி சங்கங்களின் உத்தியோகத்தர் குழுவினரை வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ விளக்கமளிப்பதன் ஊடாக முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தின் பொருட்டு தற்போதுள்ள அங்கத்தவர்கள் (சமுர்த்தி பயனாளிகள் உட்பட) மற்றும் வயதுவந்த குறைந்த வருமானம் பெறும் திருமணமான/திருமணமாகாத சகல மக்கள் பிரிவினரும் கலந்துகொள்கின்ற பிரகாரம் அழைப்புக்களை மேற்கொள்ளல்வேண்டும்.

III. முதலாவது பொதுச் சபை கூட்டத்தினை நடாத்துதல்

மேலே இலக்கம 02.01 இன் பிரகாரம் பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்படுகின்ற தினத்தில் சகலருக்கும் இலகுவில் கலந்துகொள்ளக் கூடிய வகையில் பொருத்தமான இடம் ஒன்றில் கூட்டத்தினை நடாத்ததுவதற்கு கிராம உத்தியோகத்தர், பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர்களால் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் அக் கூட்டங்களின் தலைமைப் பொறுப்பினை பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏற்று நடாத்துதல் வேண்டும்.

முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் கீழே காட்டப்படும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பில் அங்கத்துவத்தினை எதிர்ப்பார்க்கின்ற சகல விண்ணப்பதாரிகளும் அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தினை (இணைப்பு இலக்கம் 01) சமுதாய அடிப்படை அமைப்பின் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) அமைப்பு விதிக்கேற்ப சமுதாய அடிப்படை அமைப்பின் கட்டுப்பாட்டுச் சபையாக கீழே குறிப்பிடப்படுபவர்களைக் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினை மேலதிக வாக்குகளால் தெரிவு செய்து நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

I. தலைவர்
II. உப தலைவர்
III. செயலாளர்
IV. உதவிச் செயலாளர்
V. பொருளாளர் உட்பட

VI. மேலும் 06 அங்கத்தவர்களுக்குக் குறையாத 15 பேருக்கு மேற்படாத நிறைவேற்று

குழு அங்கத்தவர்கள் (நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சரியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்)

VII. உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். (உள்ளகக் கணக்காய்வாளர் நிறைவேற்றுக்குழு அங்கத்தவர் ஒருவராக இருத்தலாகாது)

(இ) நிறைவேற்றுக் குழுவினை நியமித்ததன் பின்னர் தலைவர் சமுதாய அடிப்படை அமைப்பின் கூட்டத்தில் தலைமையினை வகித்தல் வேண்டும்.

(ஈ) மாதாந்த அங்கத்தவர் கட்டணத்தினை நிர்ணயித்து பிரேரணை ஒன்றினை நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும்.
(அங்கத்துவத்துவம் நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரித்தன் பின்னர் நிர்ணயிக்கப்பட்ட அங்கத்தவர் கட்டணத்தினை அறவிட்டு அங்கத்தவர் அட்டை ஒன்றினை வழங்குதல்)

(உ) சமுதாய அடிப்படை அமைப்பின் அலுவலகம் அமையும் இடத்தினை நிர்ணயித்த பிரேரணை ஒன்றினை நிறைவேற்றிக் கொள்ளல்.

(ஊ) சமுதாய அடிப்படை அமைப்பின் வங்கிக் கணக்கினை தனது அதிகார பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் திறந்து பராமரித்துச் செல்லும் பொருட்டு பிரேரணை ஒன்றினை நிறைவேற்றிக் கொள்ளல்.

(எ) அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அமைப்பு விதி மற்றும் நிர்வாகக் கடடமைப்பின் மாதிரிக்குப் பொருத்தமான வகையில் தயாரித்துக் கொள்ளப்பட்ட அமைப்பு விதி மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினை நிறைவேற்றிக் கொள்ளல் (இணைப்பு 02)

(ஏ) கட்டுப்பாட்டுச் சபையாக தெரிவு செய்து கொண்ட நிறைவேற்றுக் குழுவின் முதலாவது கூட்டத்தினை தீர்மானித்தல்.

(ஒ) 2013ம் ஆண்டின் சமுர்த்தி சட்டத்தின் பிரகாரம் சமுதாய அடிப்படை அமைப்பிற்கு குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் பிற ஏதேனும் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

குறிப்பு 02

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினை பதிவு செய்தல், மற்றும் 2009/08 மற்றும் 2007 மார்ச் 07ம் திகதியின் அதிவிஷேட வரத்தமானியின் 04 (03) பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட வேண்டிய சிபாரிசு தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கை எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

**03. சமுர்த்தி பிரதேச அமைப்புக்களை ஆரம்பிக்கும் பொருட்டு முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துதல்.**

I. முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தை தீர்மானித்தல்.

2017ம் மார்ச் 29ம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒரு நாளில் பிரதேச செயலாளரின் ஆலோசணையின் பிரகாரம் தலைமையக சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்கள் ஒன்று கூடிய சமுர்த்தி பிரதேச அமைப்பினை ஆரம்பிக்கும் பொருட்டு முதலாவது பொதுச் சபைக் கூட்ட திகதியினை (2017 ஏப்ரல் 07ம் திகதிக்கு முன்னர் முதலாவது நாள் என்ற வகையில்) தீர்மாணிக்க வேண்டியதுடன் அதனை தலைமையக கூட்ட அறிக்கையில் உறுதியாக குறிப்பிடல் வேண்டும்.

II. முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தின் அழைப்பு

(அ) மேலே 03.1 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட சமுர்த்தி பிரதேச அமைப்பின் முதலாவது பொதுச் சபை கூட்ட திகதிக்கு 03 நாட்களுக்குக் குறையாத நாள் ஒன்றில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் மூலம் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் சகல சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களுக்கும் வாய்மொழியாகவும், எழுத்துமூலமாகவும் கூட்டம் நடைபெறும் தினம் தொடர்பில் அறிவிக்கப்படல் வேண்டும்.

(ஆ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் அங்கத்தவர்களாக பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருட்டு பிரதேச செயலாளரால் பெயரிடப்படுகின்ற பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுகின்றவர்கள் மூவருக்கு முதலாவது பொதுச் சபைக் கூட்டத்திற்கான அழைப்பிதலும் கூட்டம் நடைபெறும் தினத்திற்கு 03 தினங்களுக்குக் குறையாத நாள் ஒன்றில் எழுத்துமூலம் தலைமையக சமுர்த்தி முகாமையாளரால் அறிவிக்கப்படல் வேண்டும்.

III. முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துதல்

மேலே 03.1 இன் பிரகாரம் முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்கு தீர்மானிக்கின்ற தினத்தில் பிரதேச செயலாளரின் ஆலோசனைகளின் பிரகாரம் பொருத்தமான இடம் ஒன்றில் சமுர்த்தி பிரதேச அமைப்பின் முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்கு தலைமைப் பொறுப்பு சமுர்த்தி முகாமையாளரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அக் கூட்டத்தின் தலைமைப் பொறுப்பினை தலைமையக சமுர்த்தி முகாமையாளர் வகித்தல் வேண்டும். முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(அ) அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட சமுர்த்தி பிரதேச அமைப்பின் அங்கத்துவத்தினை எதிர்பார்க்கின்ற சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தினை (இணைப்பு இலக்கம் 03) சமுர்த்தி பிரதேச அமைப்பின் செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) அமைப்பு விதிக்கேற்ப சமுர்த்தி பிரதேச அமைப்பின் கட்டுப்பாட்டுச் சபையாக கீழே குறிப்பிடப்படுகின்றவர்களைக் கொண்டதாக நிறைவேற்றுக் குழுவொன்றினை மேலதிக வாக்குகளால் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

I. தலைவர்
II. உபதலைவர்
III. செயலாளர்
IV. உதவிச் செயலாளர்
V. பொருளாளர் உட்பட

VI. மேலும் 06 அங்கத்தவர்களுக்குக் குறையாத 15 பேருக்கு மேற்படாத நிறைவேற்று குழு அங்கத்தர் (நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை சமுர்த்தி பிரதேச சமுதாய அடிப்படை அமைப்புக்களின் எண்ணிக்கைக்கேற்ப சரியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்)

VII. உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை செலவு செய்து கொள்ள வேண்டும். (உள்ளகக் கணக்காய்வாளர் நிறைவேற்றுக்குழு அங்கத்தவர் ஒருவராக இருத்தலாகாது)

நிர்வாகக் கட்டமைப்பினை நிறைவேற்றிக் கொள்ளல் (இணைப்பு 04)

(இ) நிறைவேற்றுக் குழுவினை நியமித்ததன் பின்னர் தலைவர் சமுர்த்தி பிரதேச சமுதாய அமைப்பின் கூட்டத்தில் தலைமையினை வகித்தல் வேண்டும்.

(ஈ) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களிலிருந்து மாத்திரம் அறவிடப்படுகின்ற

தாபன வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தை நிர்ணயித்து பிரேரணை ஒன்றினை நிறைவேற்றல்.
(அங்கத்துவம் நிறைவேற்றுக் குழுவால் அங்கீகரித்தன் பின்னர் நிர்ணயிக்கப்பட்ட அங்கத்தவ கட்டணத்தை அறவிட்டு பற்றுச் சீட்டு ஒன்றினை வழங்குதல்)

(உ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் அலுவலகம் அமையும் இடத்தினை நிர்ணயித்த பிரேரணை ஒன்றினை நிறைவேற்றிக் கொள்ளல்.

(ஊ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் வங்கிக் கணக்கு அந்த சமுர்த்தி பிரதேச அமைப்பின் அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்குச் சொந்தமான சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் ஆரம்பித்து பராமரித்துச் செல்லும் பொருட்டு பிரேரணை ஒன்றினை நிறைவேற்றிக் கொள்ளல்.

(எ) அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள பிரகாரம் சமுர்த்தி பிரதேச அமைப்பின் அமைப்பு விதி மற்றும் நிர்வாகக் கடடமைப்பின் மாதிரிகுப் பொருத்தமான வகையில் தயாரித்துக் கொள்ளப்பட்டு அமைப்பு விதி மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினை நிறைவேற்றிக் கொள்ளல் (இணைப்பு 04)

(ஏ) கட்டுப்பாட்டுச் சபையாக தெரிவு செய்து கொண்ட நிறைவேற்றுக் குழுவின் முதலாவது கூட்டத்தினை தீர்மானித்தல்.

(ஒ) 2013ம் ஆண்டின் சமுர்த்தி சட்டத்தின் பிரகாரம் சமுதாய அடிப்படை அமைப்பிற்கு குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் பிற எதேனும் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

(ஏ) 2013ம் ஆண்டின் 1ம் இலக்க சமுர்த்தி சட்டத்திற்கேற்ப பிரதேச அமைப்பிற்கு குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்ற தேவைப்படக் கூடிய பிற ஏதேனும் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

(ஒ) 2013ம் ஆண்டின் 1ம் இலக்க சமுர்த்தி சட்டத்திற்கேற்ப பிரதேச அமைப்பிற்கு குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்ற தேவைப்படக் கூடிய பிற ஏதேனும் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

**குறிப்பு 03 :-**

சமுர்த்தி பிரதேச அமைப்பினை பதிவு செய்தல் மற்றும் 2007/08 என்ற இலக்கமும் 2017 மார்ச் 07ம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியின் 04 (03) பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் தலைமையதிபதியால் வழங்கப்படவேண்டிய சிபாரிசு தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கை எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

**04. தெளிவு படுத்திக்கொள்ளல் :-**

இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விளக்கங்கள் தேவைப்படின் சந்தேகமின்றி சமுதாய அடிப்படை அமைப்பிற்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளரை தொடர்பு கொள்ளவும்.
(தொலைபேசி இலக்கம் 011-2873799)

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் தலைமையதிபதி
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

பிரதிகள்

1) சமூக வலவூட்டல் மற்றும் நலனோம்புகை
கௌரவ அமைச்சர் திரு. எஸ்பீ திசாநாயக்க – த.கூ.க பொருட்டு
2) சமூக வலவூட்டல் மற்றும் நலனோம்புகை
கௌரவ பிரதி அமைச்சர திரு ரஞ்சன் ராமநாயக்க – த.கூ.க பொருட்டு
3) செயலாளர் - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு – த.கூ.க பொருட்டு
4) மேலதிக செயலாளர் - அபிவிருத்தி - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
– த.கூ.க பொருட்டு
5) மேலதிக செயலாளர் - நிர்வாகம் - சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
– த.கூ.க பொருட்டு/உ.ந.பொருட்டு
6) பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
– த.கூ.க பொருட்டு/உ.ந.பொருட்டு
7) பிரதான உள்ளகக் கணக்காளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் – த.கூ.க பொருட்டு
8) சகல பணிப்பாளர்கள் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் – த.கூ.க பொருட்டு